# திருக்குறள்

# தெய்வக் கொள்கை

சென்னை

ஆசிரியர் :

**வித்வான் பு. மா. கோவிந்தராஜ கோன் அவர்கள்**

*தியாகராய செட்டி உயர்நிலைப்பள்ளி*

வண்ணையம்பதி

சென்னை

**முத்தமிழ் நிலையம்**

சென்னை.

1947

First Edition April 1946

T. V. C. Press.
329, Mint Street.
G. T., Madras.

Published by : M. Chakravarthi Nainar,
Cottage Industries Publishing House,
.Q. H. Ms 459.—2000 Copies

## "தெய்வம் தெளிமின்"

ஓர் நாள் மாலை. கடற்கரை ஓரம். குளிர் காற்றின் இன்பத்தில் களித்திருந்தேன். கையில் இளங்கோவடிகளின் தனித்தமிழ்க் காவியம். கடற் கன்னியின் ஸ்பரிசம் என்னைத் தீண்டியதும் சிலப்பதிகாரத்தில் சிந்தை சென்றது. படித்துப் படித்து மகிழ்ந்தேன். கடைசி பாகம் சென்றேன். இளங்கோவடிகளின் அறவுரைகள் ஈங்கென்னை ஆர்வத்தோடு அழைத்தன. ஆழ்ந்து வாசித்தேன். திடீரென ஓரிடத்தில் சிந்தை நின்றது. திகைத்தது! மனம் பலபல எண்ணத் தொடங்கியது. கண்களை நன்றாய்க் கசக்கித் துடைத்துக் கொண்டேன். மறுமுறை கருத்தை ஊன்றி வாசித்தேன். தெய்வந்தொழுமின் என்றில்லை. **"தெய்வந் தெளிமின்"** என்றுதான் இருந்தது. காரணம் அறிய மனம் வேகமாக விரைந்தது. சிலப்பதிகாரக் காவியச் சோலையுள் புகுந்தேன். அங்குக் காணும் தெய்வ வழிபாடுகளை எல்லாம் தனித்தனியாக ஊன்றி வாசித்தேன். பன்முறை படித்தேன். மெய்யுணர்வுக்கிடமளித்தேன். **தெய்வந் தெளிய** அதிக நேரம் பிடிக்கவில்லை. தவத்தலைவியார் கவுந்தி யடிகள் தருமஞ் சாற்றும் சாரணர்களைத் தொழுது அறிவனை வணங்கும் தெய்வப் பகுதியாகிய **"அறிவன் அறவோன் அறிவு வரம்பிகந்தோன்"** என்ற தொடரில் உள்ள

கடவுள் வாழ்த்திற்கும் திருக்குறள் கூறும் கடவுள் வாழ்த்திற்கும் தொடர்பு உண்டோ வென என் மனம் சிந்தித்தது. திருக்குறள் கடவுள் வாழ்த்தை மனத்தால் படித்தேன். படித்த பின்னர் அவை இரண்டும் உடன் பிறந்த சகோதரர்போலக் காட்சி யளித்தன. தெய்வம் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று தெளிந்தேன். வீடு திரும்பினேன். தமிழ் நூல்களிலே நுழைந்தேன். திருக்குறளில் கூறும் தெய்வக் கருத்துக்களும் சொற்றொடர்களும் புதையற்போற் புறப்பட்டன. மேலும் மேலும் கிடைக்கின்றன. அவைகளை யெல்லாம் திரட்டுவதாயின் ஒரு பெரிய புத்தகமாக வெளியிடலாம். புலவர் பெருமக் களுக்கு அவ்வளவு அவசியமில்லை. தொகுப்பாக மட்டும் சிலவற்றை இங்கு அளித்தால்போதும். இவ்வாராய்ச்சியால் தமிழ் நூல்கள் இருவகைக் கருத்துக்களையும் இருவகைக் கொள்கைகளையும் கொண்ட இருவகையின என்பதை உணர்ந் தேன். அவைகளுள் தமிழ் மறையாகிய திருக் குறள் கருத்துக்களையும் கொள்கைகளையும் அடிப் படையாகக் கொண்டவை ஒன்று. ஒருவருக் கொரு நீதியைப் போதிக்கும் வைதிக மனு தர்ம சாஸ்திரத்தை அடிப்படையாகக் கொண்டவை மற்றொன்று. (தெய்வக் கொள்கைகள் மாத்திர மின்றி இல்லறம் துறவறம் ஆகிய வாழ்க்கைக் கொள் கைகளும் அரசியல் கொள்கைகளும் அவ்விரு

வகை நூல்களையே கடைப்பிடித்துள்ளன என்பதையும் கண்டேன். காய்தல் உவத்தல் இன்றி ஆராய்வோர்க்கு இவ்வுண்மை புலப்படும். **"தெய்வந் தெளிமின்"** என்ற இளங்கோவடிகளின் அறவுரை எத்தகைய அறிவுப் புரட்சியையும் ஆராய்ச்சி நுட்பத்தையும் எழுப்பி யுள்ளது என்பதை எண்ணிப் பாருங்கள். நிறுத்து அறுத்துச் சுட்டு உரைத்துப் பொன் கொள்வார்போலத் தமிழ் நூல்களை ஆராய்ந்து தெய்வந் தெளியுங்கள்.

"கடையிலா ஞானத்தோடு காட்சி வீரியமே யின்பம்
இடையுறு நாமமின்மை விதித்தகோத் திரங்க
ளின்மை
அடைவிலா வாயுவின்மை அந்தரா யங்க ளின்மை
உடையவன் யாவன்மற்றிவ் வுலகினுக்
கிறைவ னுமே."

என்ற சூடாமணி நிகண்டும் "தெய்வந் தெளிமின்" என்ற இளங்கோவடிகளின் உள்ளக் கருத்திற்கு உறுதுணை செய்கின்றது.

சென்னை:
12-3-'47

**பு. மா. கோவிந்தராஜ கோன்.**

# திருக்குறள்

## கடவுள் வாழ்த்து

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றா ளொழாஅ ரெனின்.

மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்.

வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில.

இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க
நெறிநின்றார் நீடுவாழ்வார்.

தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க்
மனக்கவலை மாற்ற லரிது. [கல்லால்

அறவாழி யந்தணன் றாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்த லரிது.

கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்
தானை வணங்காத் தலை. தான்

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார்.

---

பண்டையத்
தமிழ் நூற்களில் திருக்குறள் கூறும்
## தெய்வக் கருத்துக்கள்

---

1 " அகர முதலவெழுத் தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு "

" மன்னியபே ருலகனைத்தும்
நின்னுள்ளே நீ யொடுக்கினை
நின்னின்று நீ விரித்தனை
நின்னருளின் நீகாத்தனை
யெனவாங்கு
ஆதிபகவனை* யருகனை
மாதுயர் நீங்க வழுத்துவம் பலவே "

—திருக்கலம்பகம் 103

---

* ஆதிபகவன் என அருகனைப் போற்றும் சொற்றொடர் தமிழ் நூல்களில் ஆங்காங்கு காணப்படுவதால் இதனைத் திருக்குற ளாசிரியரின் தாய் தந்தையர் பெயரெனக் கொண்ட ஒவ்வாத பொருளும் இவ்வாராய்ச்சியால் அடியோடு அடிபட்டு விடுகின்றது.

" **ஆதிபகவன்** அசோகவசலன்
சேதி முதல்வன் சினவரன் தியம்பகன் "

— **திருப்பாமாலை** (அருகசரணம்)

" அத்தனே யென்னை யாளீர்சரணம்
**ஆதிபகவா** னருளே சரணம்."

— **தோத்திரத்திரட்டு**

" செறிவன் சினேந்திரன் சித்தன் **பகவன்** "

— **சிலப்பதிகாரம்**

" ஆதியந்தளப்பரியவ **ருகந்தபகவர்** தமறஞ்சால்
சேதியம் புக்கவர்தந் திருந்தடிகளைப்
பெருந்துதி சேர்."

— **நீலகேசி 162**

" புண்ணியா ஜினனே பொன்னெயிற் கிறைவா
பூரண **பகவா** புஷ்பவாகனனே "

— **தோத்திரத்திரட்டு**

"நீடற்க வினையென்று நெஞ்சினுள்ளி
நிரைமலரஞ் சாந்தமொடு புகையுநீவி
வீடற்குந் தன்மையினான் விரைந்து சென்று
விண்ணோடு மண்ணினிடைய நண்ணும்பற்றி
பாடற்கும் பணிதற்கும் தக்கதொல்சீர்
**பகவன்றன்** அடியிணையைப்பற்று நாமே "

— **யாப்ப-விருத்தி-சூத் 75**
உரை மேற்கோள்.

"பரமநீ பகவநீ பண்ணவநீ புண்ணியநீ"

— யாப்பருங்கல விருத்தி சூத் 83
உரை மேற்கோள்.

" ஆதிவேதம் பயந்தோய்நீ "

— சீவக சிந்தாமணி 1242

" ஆதியங்கடவுளை அருமறைப் பயந்தனை "

— சூளாமணி 36

" ஆதிமுதற்கடவுளுக்குக் குணப்பேர் தூய "

— திருக்கலம்பகம்

" ஆதியே ஆதியன்றி அகிலமும் பரந்துநின்ற "

— திருக்கலம்பகம்

" அண்டர்புகழ் தொண்டர்மகிழ் எண்டிசையும்
பேர்பெற்ற ஆதிநாதக் கடவுளே "

— தோத்திரத்திரட்டு (ஆர்ப்பாகை)

" ஆதிவேதத்து நாதன் புருவிந்த வுலகமேத்த"

— மேருமந்தர புராணம் 18

" ஆதிதேவ ரநாதிதேவ ரென்றுருமேத் தருகந்தனே
நீதிசேர் திருமயிலை மேவிய நேமிநாத சுவாமியே"

— தோத்திரத்திரட்டு (மயிலைப்பதிகம்)

" விருப்புறு பொன்னெயிற்குள் விளங்க
வெண்ணெழுத் திரண்டும்
பரப்பிய ஆதிமூர்த்தி பங்கயப்பாதம் போற்றி"

— சூடாமணி நிகண்டு

"போது விண்ட புண்டரீக
மாதரோடு வைக வேண்டின்
**ஆதி நாதராய்ந்த** நூலின்
நீதியோடு நினமினே"

— **யாப்பரு-வி-2-வது பகுதி**

"போது சாந்தம் பொற்பவேந்தி
**ஆதிநாதற்** சேர்வோர்
சோதிவானந் துன்னுவாரே.

— **யாப்பருங்கலக்காரிகை**
உரை மேற்கோள்.

"துதித்தம ரேந்திரர் தொழவிங் கதாதியுஞ்
சிதைத்துமா கித்திங்களபர
சதுர்த்தகிய பிசித்துதய காலத்தின்
அகதி யடைந்தருள் **ஆதிநாயகா**"

— **திருப்பாமாலை**

*    *    *

2 கற்றதனாலாய பயனென்கொல் **வாலறிவன்**
நற்றாள் தொழா ரெனின்;

— **திருக்குறள்.**

"வினையின் நீங்கி விளங்கிய **அறிவன்**"

— **தொல்காப்பியம்.**

"**அறிவன் அறவோன்** அறிவுவரம் பிகந்தோன்"

— **சிலப்பதிகாரம்.**

"**அறிவனடிக்கீழ்** அரசஞ் சித்துறந் தவாறும்"

— **சீவக சிந்தாமணி 72**

"அறிவரடி முதலார்வம் பெருக்க"

— சூடாமணி துறவு 172

"அறிவினு ளறியாத அறிவனீ"

— மேருமந்தர புராணம் 63

"இலங்கொளி முக்குடை யெந்திரத்தியங்க
அறிவர் சரிதமுறையிற் காட்டி"

— பெருங்கதை

"அருந்தவனாய் அறம்பகர்ந்த அறிவனீயே"

— சீவசம்போதனை அத்தி-1-பெ-23

"மதிகளைன்கையும் கடந்தனை யடைந்தனை
யுலகெலா மதியொன்றின்"

— மேருமந்தரபுராணம் 193

"அறிவனடி யிணைபரவப் பெறுகுவர்
யாவரும் பிறவா நெறியே"

— யாப்பருங்கல-விருத்தி சூத்திரம் 93

"அறிவர் மாமணியரங்கின் மீதுதாங்கும்"

— திருக்கலம்பகம்

"அறியவன் காதற் பெருங்கிழத்தி யகிலமீன்ற"

— திருக்கலம்பகம் 101

"அலகிறந்த ஒளி மூன்றினுலகனைத்தும் உடன்
கடையிகந்த காட்சியொடு கடையிகந்த [விழுங்கி
வாலறிவன்"

— திருக்கலம்பகம் 109

"அறிவனா தடியிணைப் பரவப் பெறுகுவர்
யாவரும் பிறவா நெறியே"

— திருப்பாமாலை.

"அறிவனீ அமலனீ ஆதிநீயே";

— தோத்திரத்திரட்டு.

"பூவினும் புகையினும் பொற்பமை விளக்கினும்
அமிழ்தினும் பலத்தினும் அறிவன் திருந்தடி
செவிகொள வர்ச்சித்துச் செய செயவென்றே
அருகனை அறிவனை யதிசயத் தொருவனை"

— திருப்பாமாலை.

"அறிவனைத் தொழாதவர் தொலையாத"

திருக்கலம்பகம் 90

"திங்கண் முக்குடைக் கவிப்பத் தேவர்தந்திருந்
தவை தெருள
அங்கபூவமதவறந்தா யறிவர் தம் அறிவர்க்கு
மறிவா"

*   *   *   —நீலகேசி

**அறிவர் கோயில்**

புதுக்கோட்டை சித்தண்ணவாசலுக் கடுத்த கோயிலுக்கு அறிவர் கோயில் என்று கல்வெட்டு கூறுகின்றது.

3 மலர் மிசையேகினன் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ்வார்

திருக்குறள்

"மலர்மிசை நடந்தோன் மலரடி யல்லதென்
தலைமிசையுச்சித் தானணி பொறாது"

சிலப்பதிகாரம்.

"விரிபூந்தாமரைமேற் சென்ற திருவாரடியேத்தி"

சீவக சிந்தாமணி 2814

"போதியங்கிழவனை பூமிசை யொதுங்கிய"

சூளாமணி (இரதநூபுரச்சருக்கம்) 96

"விரைமணர்ந்த தாமரைமேல் விண் வணங்கச்
சென்றாய்"

சூளாமணி (இரதநூபுரச்சருக்கம் 68)

"கமலபீ துலவுமுனைக் காதலிப்பா ரரியரே"

மேருமந்தர புராணம் 66

"தாவின்றி யெப்பொருளுங் கண்டுணர்ந்து
பூவின்மேல் சென்றான் புகழடியை" [தாமரைப்

அறநெறிச்சாரம்.

"தண்டாமரைமேல் நடந்தான்றடந்தாள் வணங்கிக்
கண்டேன் கிடந்தேன் கனவின்னிது கண்டவாறே"

நீலகேசி 3.

"நகாமின்ற தாமரைமேல் நடந்தேகிய நற்றவனே"

திருநூற்றந்தாதி 45

"கமலத்தின்மீது நடந்தாய் சரணம்"

தோத்திரத்திரட்டு

"மருவார் மலர்ப்பிண்டி மன்ற நமஸ்தே
வண்டாரு மலர்மேல் நடந்தாய் நமஸ்தே"

தோத்திரத்திரட்டு

"பூமிசை நடந்த புயலே சரணம்"

திருப்பாமாலை

"தண்டாமரைமேல் நடந்த தத்துவனே"

திருப்பாமாலை

"தாட்டவிழ் தாமரை நடந்த தத்துவனைமுத்தி
முதற் பொருளை"

திருமயிலைப்பதிகம் (தோத்திரத்திரட்டு)

"கொங்கு வீசு செம்பங்கயப் பூமிசை நடந்தவர்
தடந்தாளுட்
கொண்ட தொண்டர்த மருளினுல் வந்தது"

திருக்கலம்பகம் 102

"தாதிவர் தாமரைத் தடமல ரொதுங்கிய
வாதியை வணங்கி யறைகுவ னெண்ணே"

எண்ணூல் (அவிநயனர்)
(நன்னூல் மயிலைநாதர் உரைமேற்கோள்)

"வெறிகமழ் தாமரை மீமிசை யொதுங்கிய
வறிவனை வணங்கி யறைகுவன் யாப்பே"

யாப்பருங்கல விருத்தி தெய்வ வணக்கம்

"விரையார் மலர்மிசை வருவார் திருவறம் விழைவார்
கொலையினை விழையார் பொய்

உரையார் களவினை யொழுகார் பிறர்மனை யுவவார்
மிகு பொருளுவவார் வெஞ்
சுரையா னுணர்வினையழியார் அழிதசை துவ்வார்
விடமென வெவ்வாறும்
புரையார் நறவினை நுகரார் இரவுணல் புகழார்
குரவரை இகழாரே"

**திருக்கலம்பகம் 67**

4 **வேண்டுதல் வேண்டாமை**யிலா னடி சேர்ந்தார்க்
கியாண்டும் இடும்பையில.

**திருக்குறள்**

"**வேண்டுதல் வேண்டாமை** யில்லாத வீரனடி
பூண்டு கிடந்தாற் புறத்திறத்த வெங்கூற்றம்
போகும் போலும்"

**திருக்கலம்பகம் 58**

"ஆழத்துதி **யார்வமுஞ் செற்றமு நீக்கிய** வச்சுதனே"

**திருநூற்றந்தாதி 20**

"**உவத்தல் காய்தலானுன்** திருவடித் தவத்தெழுந்
தோர்க்
**குவத்தல் காய்தலுன்** திருவுளத் தொன்றுநீ
யிலையேற்"

**மேருமந்தர புராணம் 128**

"**விருப்பும் வெறுப்பும்** வெறுத்தாய் போற்றி"

**திருப்பாமாலை**

"ஆர்ந்த பேரன்பின் அடைந்தவர்க்கருளும் அடைந்
திலாதவர்களுக் கருணைத்
தீர்ந்தோர் சினமும் திருவுளத்திலரே"

தோத்திரத்திரட்டு

"காமமுடையார் கறுவோடார்வ முடையாருந்
தாமமொடு சாந்து புனைவார் பசியிலுண்பார்
ஏம முடையார்க ளிவரல்ல ரிவையில்லா
வாமனடியல்ல பிறவுந்தியன்மி னென்றார்.

சீவகசிந்தாமணி 2874

"மலர்தலை யுலகின் மல்கிருளகல
இல கொளி பரப்பி யாவையும் விளக்கும்
பரிதியி னொரு தானாகி முதலீ
றொப்பள வாசை முனிவிகந்துயர்ந்த
அற்புத மூர்த்தி"

நன்னூல் சிறப்புப்பாயிரம்

"பற்றற்றவர்கள் வந்துன்னைப் பற்றிலவர்கள்
பற்றற்றே
நிற்றற் கியைந்து பற்றுது நின்றாயிதுவு
நெறியாமோ
கொற்றக் கவிகை யொரு மூன்றுங் குளிர்
வெண்டிங்கள் நிலாவெறிக்கும்
முற்றத்தமரர் முடிகள் வெயிலெறிக்கு மெயிலாய்
மொழியாயே"

திருக்கலம்பகம்

* * *

5 "இருள்சேர் இருவினையும்சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந் தார்மாட்டு."

—திருக்குறள்

"இருள்புரி யுலகஞ் சேரா
வியனெறி பயந்த பெம்மான்
பொருள்புரி விழவு காண்பார்
புண்ணிய வுலகங் காண்பார்."

—சூளாமணி (துறவு) 27

"இருள்புரி வினைகள் சேரா
திறைவன தறத்தை யெய்தின்
மருள்செய வருவ துண்டோ
வானவ ரின்பமல் லால்."

—யசோதர காவியம் 5-வது சருக்கம் 46

"முருகவிழ்தா மரைமலர்மேன்
முடியிமையோர் புடைவரவே
வருகினனார் தருமறைநூல்
வழிபிழையா மனமுடையார்
இருவினைபோய் விழமுனியா
வெதிரியகாதி யையரியா
திருமலரா யருவினராய்
நிலவுவர் சோதியினிடையே."

—யாப்பருங்கலக்காரிகை மேற்கோள் 15

"வென்றான் வினையின் றொகையாகி விரிந்து தன்கண்
ஒன்றாய்ப் பரந்தவுணர் வின்னெறி யாதுமற்றுஞ்
சென்றான் றிகழுஞ்சுடர் சூழொளி மூர்த்தியாகி
நின்றா னடிக்கீழ்ப் பணிந்தார் வினை நீங்கி நின்றார்."

—சூளாமணி

"விரிகொ டண்டளிர்ப் பிண்டிமர
நிழலிருந் திருவினையும்
பிரியும் பெற்றியை யுரைத்தாய்பெ
ரியவர்ப்பெரியவர்ப் பெரியோய்

—நீலகேசி 150

அறுநால் வராய்ப் புகழ்ச்சே வடியாற்றப்
பெறுநால்வர் பேணிவழங்கிப்—பெருநாள்
மறைபுரிந்து வாழுமேல் மண்ணெழிந்து விண்ணோர்
இறைபுரிந்து வாழ்த லியல்பு [க்கு

—ஏலாதி

வீடாந் திறமும் வினையும் வினைபயனும்
மோடாத் தடுமாற்றத் துட்பொருளைச் சொன்னானை
வாடா மலர்பிண்டி வாமனை நாடோறும்
பாடாத நாவெல்லாம் பாவ நாவல்லவோ.

—தோத்திரத் திரட்டு

"அண்ணிழ லசோகமர்ந் தருணெறி நடாத்திய
மணிதிக ழவிரொளி வரதனைப்
பணிபவர் பவநனி பரிசறுப்பவரே."

—யாப்பருங்கலக்காரிகை
மேற்கோள் பக். 23

"கறுவு பகையற வுறவிலருள்புரி
கடவுண்மலரடி துன்னியோர்
மறுவில் திருவற வமிர்தவருவியின்
மயல்கொள் இருவினை மண்ணவே."

—திருக்கலம்பகம் 9

6 "பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்."

—திருக்குறள்

"ஐவரை வென்றோன் அடியிணை யல்லது
கைவரைக் காணினும் காணா வென்கண்."

—சிலப்பதிகாரம்

"பொறிவாயி லைந்தவித்தப் புனித நீயே."

—ஜீவசம்போதனை
அத்தி 1-செய் 29

"பொறி வரம்பாகிய புண்ணிய முதல்வன்."

—சீவகசிந்தாமணி 9563

"பொறியிலா வறிவனீ பூசனைக் கிறைவனீ."

—மேருமந்தர புராணம் 1000

"பொறி யொடுவல் வினைவென்ற புனிதனீயே."

—நாககுமார காவியம்

"பொறியைம் புலத்தின் வேட்கைநோய் தீர்க்கு
மருந்தெதன் றருந்தவர்கள் போற்றும் பதத்தன்."

—திருக்கலம்பகம் 101

"ஐந்தாய பெருவேழ மெய்தாய் நமஸ்தே."

—தோத்திரத்திரட்டு

7 "தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லான்
மனக்கவலை மாற்ற லரிது."

—திருக்குறள்

"முனிமை முகடாய மூவா முதல்வன்
தனிமைத் தலைமை தனதுநா னென்ப
தனிமைத் தலைமை தனதுதா னென்றூற்
பனிமலர் தூய் நின்று பழிச்சாவா றென்னே."

—சீவகசிந்தாமணி 1609

"பூரணை யாற் பதினாற்கயிற்
றொக்கப்புவன மெல்லாம்
நீரணை மாருதந் தாங்கிய
தொக்குநிவந்த சிங்கம்
பேரணை யார்க் கிணையாருமில்லாப்
பெரியோர்க்கு விண்ணோர்
பாரணை யாவடி தாங்கச்செந்
தாமரை பாரித்ததே."

—திருநூற்றந்தாதி 91

"அருகனீ நல்லபூசைக் கருகனாய்ப்
பெரியையாயினை பெண்மையின்மையா
லொருவனாயினை யொப்பவ ரின்மையால்
உருவமாயினை தோற்றம தின்மையால்."

—மேருமந்தர புராணம் 1300

"ஒருதனி விளங்கிய வுத்தமா போற்றி."

—திருப்பாமாலை

"வெலற்கரும் வினைப்பகை வேரொடும் வென்றனை
சொலற்கரு மெய்ப்பொருள் முழுவதுஞ் சொல்லி
அருவினை வெல்பவர்க் கரும்புணை யாயினை [னை
யொருவனை யாகி யுலகுட னுணர்ந்தனை."

—யாப்பரு. விரு. சூத்-83

"போதுறு முக்குடைப் பொன்னெயி லொருவன்
தாதுறு தாமரை யடியிணை பணிந்தார்
தாதுறு தாமரை யடியிணை பணிந்தார்
தீதறு தீவினை யிலரே."

—யாப். விரு. சூ. 76. உரை மேற்கோள்

"எனவாங்கு,
ஒருதனிக் கடவுணிற் பரவுது முயிர்க
ளின்னல் வெங்கனல்கூர் புன்னெறித் தலைச் சென்
றறுபுலக் கோண்மாத் திரிதருமகன் றலைப்
பிறவிக் கானத்து மறவியுற் றுழந்தாங்
கலமரு துயரினை யெறியு நின்
னிலமரு திகிரி நீடுவாழ் கெனவே.;'

—திருக்கலம்பகம்

8 "அறவாழி யந்தணன் றாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்த லரிது."

—திருக்குறள்

"மன்றனுறு மணிமுடிமேன்
மலிந்தருளா மணிபோலும்
வென்றோர் பெருமானறவாழி
வேந்தன்விரி பூந்தாமரையே."

—சீவகசிந்தாமணி 2814

"களிசேர் கணையுடைய காமனையுங் காய்ந்த
அளிசே ரறவாழி யண்ணலிவ னென்பார்
அளிசே ரறவாழி யண்ணலிவ னேல்
விளியாக் குணத்துதி நாம்வித்தாவா றென்னே."

—சீவகசிந்தாமணி 1611

"மறுவற வுணர்ந்தனை மலமறு திகிரியை."

—சீவகசிந்தாமணி 2563

"அருளாழி முன்செல்லப் பின்செல்வ தென்றோ."

—சூளாமணி துறவு 68

"ஆண்டுகொண்டே யறவாழி
கொண்டேவென்ற வந்தணனே."

—திருநூற்றந்தாதி 27

அருட் சக்கர மேந்திய அச்சுதனே

—திருநூற்றந்தாதி 67

"ஆரருள் பயந்தனை யாழ்துய ரவித்தனை
யோரரு ளாழியை யுலகுடை யொருவனே."

—சூளாமணி
இரதநூபுரச் சருக்கம் 98

"தருமச் சக்கரத் தலைவ னாக."

—திருப்பாமாலை

"அறவாழிநாதா வரியாசனத்தா."

திருப்பாமாலை

"பள்ளி யுணர்ந்திலையோ பாவாய்நீ முன்வந்தென்
வள்ள லறவாழி நாதன் மலரடியை
உள்ள மருளி யுகந்தே கடைதிறவாய்."

திருவெம்பாவை

"அறங்கொள் நேமிகொண்டுவென்ற
சோதி யெங்களாதியே."

திருக்கலம்பகம்

"கொலையிலாழி வலனுயர்த்த
குளிர்முக் குடையினிழலோய்."

சீவகசிந்தாமணி 1244

"திருவான வறவாழி யுடையாய் நமஸ்தே."

தோத்திரத்திரட்டு

"தாமரையி னங்கணடிவைத் தருளு மாதியாயாழி
யறவரசே யென்று நின்னடிபணிவ தல்லால்

சூளாமணி துறவு 73

"கடையில்லா வறிவோடு ஞானமுங் காட்சியு
முடைமையா யுலகேத்த வொண்பொருள தியல்பு

மறவாழி யிறையவரு மாதவரும் புடைசூழ [ணர்ந்து
அறவாழி வலனுயரி யருணெறியே யருளிபோய்."
யாப். வி. சூ. 83. உரை மேற்கோள்

"ஆதி யானற வாழியி னலர்ச்
சோதி யான்சொரி பூமழை யான்வினைக்
காதி வென்றபி ரானவன் பாதமே
நீதி யானினை வாழிய நெஞ்சமே."

யாப்பருங்கலவிருத்தி
ஒழிபியல். பக். 466

"பிணியார் பிறவிக்கடலுட்
பிறவாவகை நாமறியப்
பணியாய் மணியா ரணைமேற்
பணியா வொரு மூவுலகுங்
கணியா துணருங் கவினார்
கலைமா மடவாள் கணவா
வணியார் கமலத் தலரா
சனனே யறவாழிய னே."

யாப். வி. ஒழி. பக். 477

9. அருளோ டெழும்அற வாழியப்பா பிறவாழியிற்பா.
திருநூற்றந்தாதி 5

"கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை."

திருக்குறள்

"பூத்தொழியாப் பிண்டிக்கீழ்ப் பூங்கோ தவண்ணனை
நாத்தழும்ப வேத்தாதார் வீட்டுலக நண்ணாரே
வீட்டுலக நண்ணார் வினைகள்வ ராறலைப்ப
வோட்டிடுப வெண்குணனுங் கோட்பட்டு யிராவே."

**சீவகசிந்தாமணி 1469**

"பண்ணவன் எண்குணன் பாத்தில் பழம்பொருள்"

**சிலப்பதிகாரம்**

"இருநால் வினைகெடுத்திட் டெண்குணனு மெய்தி."

**ஜீவசம்போதனை**

"பண்பால் வரிவண்டுந்
தேனும்பாடும் பொழிற்பிண்டி
யெண்பாலிகந் துயர்ந்தாற்
கிசைந்த கோயிலியன்றதே."

**சீவகசிந்தாமணி 2600**

"இறைவனீ ஈசனீ எண்குணத் தலைவனீ."

**மேருமந்தர புராணம்**

"வினையற விட்டபோழ்தின்
வெடித்தவே ரண்டம்போல
நினைவருங் குணங்களெட்டு
நிறைந்துமே னோக்கியோடி."

**மேருமந்தர புராணம்**

"எண்வகை வினைகளை யியல்கெடநூறி
உண்மையி னெண்குணத் துயர்ந்த சித்தரும்."

**திருப்பாமாலை**
(பஞ்ச குருபக்தி)

"அங்கம் பயந்தவெம் ஆதியை அர்ச்சிப்பன்
காட்சியொ டூக்கொடு ஞானந்த லைநின்று
மாட்சியி லெண்குண மாசற நூறி
மீட்சியி லெண்குண மேவுதற் பொருட்டே

**திருப்பாமாலை**

"எட்டுவல் வினைவென்று பின்னையோ
ரெட்டு நற்குண மேவினை."

**தோத்திரத்திரட்டு**

"அவ்விந் திரனுக்குமுன் எண்குணத்தெங் காவலனைக்
கவிப்பார் வளைப்பார் முளைப்பார் களைப்போல்."

**திருநூற்றந்தாதி 11**

"கேவல முற்பத்தி யாமளவேகிளர் பூசனைக்கென்
றேவலியற்று மவ்விந்திரனுக்கு முன்எண் குணத்தெங்
காவலனை

**திருநூற்றந்தாதி**

**எண்குண இறைவன்**

வட ஆற்காடு ஜில்லாவிலுள்ள திருமலை ஜிநாலயத்தின் கல்வெட்டிலும் எண்குண இறைவன் எனப் பொறிக்கப்பட்டுள்ளது.

10. "பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேரா தார்."

திருக்குறள்

"எத்தருங் குணத்தவத் திறைவ யாமுடைக்
கோத்திரங் குலமிவை யருளு வாழிநீ
நீத்தரும் பிறவிநீர்க் கடலைநீந்து நற்
றேப்பையாந் திருவுருவென் றிறைஞ்சிடா."

மேருமந்த புராணம்

"ஆதி வேதம்பயந் தோய்நீ
யலர்பெய்ம் மாரியமைந் தோய்நீ
நீதி நெறியை யுணர்ந்தோய்நீ
நிகரில்காட் சிக்கிறை யோய்நீ
நாத னென்னப் படுவோய்நீ
நவைசெய் பிறவிக்கட லகத்துன்
பாத கமலந்தொழு வேங்கள்
பசையாப் பவிழப் பணியாயே."

சீவகசிந்தாமணி 1742

"சூழ்கதிர் ........................................

"ஆழ்கடற் புணையினன்ன வறிவரன்
சரணடைந்தான்."

சீவகசிந்தாமணி 380

"வீசுடல மெறிதிரையின் மேவுகடன் மருவுபுணை."

திருக்கலம்பகம் 50

"**பிறவிப் பெருங்கடலை** நீந்திய பெய்வளையாய்
உறவுத் தமர்வாழு முச்சந்த வாழ்மலைமேல்
அறமிக வுஞ்செய்யு மம்மையடி யிணைகள்."

**திருவெம்பாவை**

"**பிறவி மாக்கடல் பெயர்க்கு** மாற்றலா
லிறைவ னன்னவ னேந்து கொள்கையான்."

**மேருமந்தர புராணம் 821**

"பிறப்பென்னும் பிணிநீங்க
பிரிவரிய வினைக்கடலை
அறப்புணையே புணையாக
மறுகரைபோய்க் கரையேறி
பிறப்பில் நின்னருள் புரிந்தாங்
கெமக்கெல் லாமருளிணையாய்
மறவாளி யொளிமழுங்க
மணையவர்க்கும் முனையவர்க்கும்
அறவாழி வலனுயரி
யருள்நெறியே யருளியோய்."

**யாப்ப. விருத்தி. சூத். 83**
உரை மேற்கோள்

[library stamp]

# இறைவன் வணக்கம்

அறிவ னறவோ னறிவுவரம் பிகந்தோன்
செறிவன் சினேந்திரன் சித்தன் பகவன்
தரும முதல்வன் தலைவன் தருமன்
பொருளன் புனிதன் புராணன் புலவன்
சினவரன் தேவன் சிவகதி நாயகன்
பரமன் குணவதன் பரத்தி லொளியோன்
தத்துவன் சாதுவன் சாரணன் காரணன்
சித்தன் பெரியவன் செம்மல் திகழொளி
யிறைவன் குரவ ,னியல்குண னெங்கோன்
குறைவில் புகழோன் குணப்பெருங் கோமான்
சங்கரன் ஈசன் சயம்பு சதுமுகன்
அங்கம் பயந்தோ னருக னருண்முனி
பண்ணவ னெண்குணன் பாத்தில் பழம்பொருள்
விண்ணவன் வேத முதல்வன் விளங்கொளி
ஓதிய வேதத் தொளியுறி னல்லது
போதார் பிறவிப் பொதியறை யோரெனச்
சாரணர் வாய்மொழி கேட்டுத் தவமுதற்
காவுந்தி கைதன் கைதலை மேற்கொண்
டொருமூன் றவித்தோ னோதிய ஞானத்
திருமொழிக் கல்லதென் செவியகந் திறவா
காமனை வென்றோ னாயிரத் தெட்டு
நாம மல்லது நவிலா தென்னு

ஐவன்ர வென்றோ னடியிணை யல்லது
கைவரைக் காணினுங் காணா வென்கண்
அருளறம் பூண்டோன் றிருமெய்க் கல்லதென்
பொருளில் யாக்கை பூமியிற் பொருந்தா
தருக னறவ னறிவோற் கல்லதெ
னிருகையுங் கூடி யொருவழிக் குவியா
மலர்மிசை நடந்தோன் மலரடி யல்லதென்
றலைமிசை யுச்சி தானணிப் பொறாஅ
திறுதியி லின்பத் திறைமொழிக் கல்லது
மறுதர வோதியென் மனம்புடை பெயராது.

சிலப்பதிகாரம் நாடுகாண்காதை